


தினப்புயல்
THINAPPUYAL
news
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 51

# ஜனாதிபதி, தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் சந்திப்பு



குறுகிய அரசியல் நலன்களுக்காக மக்களை அசௌகரியத்திற்கு உட்படுத்தும் நோக்கத்தில் எதிர்வரும் 06ஆம் திகதி நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் வேலை நிறுத்தத்திற்கு எவ்வித ஒத்துழைப்பும் வழங்கப் போவதில்லை என பல அத்தியாவசிய சேவை வழங்குனர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். தமது சேவையை தொடர்ந்து வழங்குவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

நேற்று (03) பிற்பகல் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

உத்தேசித்துள்ள வேலைநிறுத்தம், தொழிலாளர்களின் உரிமைகளுக்காக அல்ல என்றும், பல அரசியல் கட்சிகளின் நலனுக்காகவே மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்தவும், மக்களை ஒடுக்குவதும் இந்த வேலைநிறுத்தத்தின் நோக்கமாகும். அதனால் நிலைமையை சரியாகப் புரிந்து கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கையை பேணுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்வது சகல ஊழியர்களினதும் கடமை மற்றும் பொறுப்பு என தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியை சமாளிக்க புதிய வழிமுறைகளைக் கையாண்டு, அரசியல் பிளவுகளிலிருந்து விலகிச் செல்ல வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி அவர்கள் சுட்டிக்காட்டினார். வேலை நிறுத்தங்களால் ஏற்படும் பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகப்படுத்துவதே இதன் பின்னணியில் உள்ள அரசியல் நோக்கம் ஆகும். இதை உணர்ந்து, நிறுவனங்கள் வீழ்ச்சியடைய இடமளிக்கக்கூடாது.

கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற வேலைநிறுத்தத்தை பொருட்படுத்தாமல் தமது கடமைகளை ஆற்றிய தொழிலாளர்களுக்கு தமது நன்றியை தெரிவித்த ஜனாதிபதி, தற்போதைய நிலைமையை புரிந்துகொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு அனைத்து தொழிற்சங்கங்களையும் கேட்டுக்கொண்டார்.

## சுகாதார அமைச்சர் பொது மக்களிடம் கோரிக்கை

மருந்துகளை கொள்வனவு செய்வதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண சுகாதார அமைச்சு விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைவாக, 1999 என்ற சுவசெரிய அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் தனக்கு மருந்துகளை பெற்றுக் கொள்வதில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் அது தொடர்பில் தெரிவிக்க முடியும் என சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார். இதனூடாக மருந்துகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் பிரச்சினையை ஒரு மாதத்தில் தீர்க்க முடியும் என கூறினால் நான் பைத்தியகாரன் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்க்க சுமார் 2 வருடங்களுக்கும் அதிகமாக செல்லும். 2 வருடங்களில் இந்த பிரச்சினையை தீர்ப்பதா அல்லது 5 முதல் 10 வருடங்கள் வரை இதனை நீடிப்பதா என்பது தொடர்பில் நாம் அனைவரினதும் கையில்தான் உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு பணப்புழக்கம் 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கூட இல்லை என நிதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றில் இன்று தெரிவித்துள்ளார். அதேபோல், வரி அதிகரிக்கவேண்டிய காலத்தில் நாம் அதனை குறைத்து பிழை செய்துள்ளதாக அமைச்சர் பாராளுமன்றில் தெரிவித்தார். அதன்படி, அரசாங்கத்தின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.7 சதவீதமாக குறைந்துள்ளதாக நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில் தேர்தல் குறித்து அரசாங்கத்தின் அறிவிப்பு

நாட்டில் எந்தவொரு தேர்தலையும் நடத்தக்கூடிய சூழல் தற்போது இல்லை என, இலங்கை அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி நாலக கொடஹேவா தெரிவித்துள்ளதாக, இலங்கை நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடக வியலாளர் மாநாடு நேற்று இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர், 'நாட்டில் தற்போது தேர்தலை நடத்தக்கூடிய சூழல் இல்லை. காரணம் முன்னொருபோதும் இல்லாதவாறு பாரிய பொருளாதார நெருக்கடிகளை நாம் தற்போது எதிர்கொண்டுள்ளோம். இவற்றிலிருந்து மீள்வதற்கான வழி தொடர்பிலேயே அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. அத்தோடு மக்கள் தற்போது தேர்தலைக் கோரவில்லை. அவர்கள் தமது வாழ்வாதார பிரச்சினைகளுக்கான தீர்வினையும், அத்தியாவசிய பொருட்களையுமே கோருகின்றனர். எதிர்தரப்பிலும் பெரும்பாலானோர் இது தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான தருணமல்ல என்று தெரிவித்துள்ளனர்' என்றார்.
(பிபிசி தமிழ்)



# மேற்கு உக்ரைனில் ஏற்பட்ட சாலை விபத்தில் 17 பேர் பலி

மேற்கு உக்ரைன் ரிவ்னே பிராந்தியத்தில் நேற்று எரிபொருள் ஏற்றி சென்ற லாரி மீது பயணிகள் பேருந்து ஒன்று மோதி ஏற்பட்ட விபத்தில் சுமார் 17 பேர் உயிரிழந்துள்ளனர். ஏற்கனவே போரின் பாதிப்பினால் உயிரிழப்புகள் ஏற்பட்டு வரும் நிலையில் விபத்தில் மக்கள் உயிரிழந்துள்ளதால் அந்நாடு மேலும் துயரத்தில் ஆழ்ந்துள்ளது.

இதுகுறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி, அந்நாட்டு மக்களுக்கு நேற்று நடத்திய தினசரி உரையில், மேற்கு ரிவ்னே பிராந்தியத்தில் பயங்கரமான சாலை விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இந்த விபத்தில் ஒரு பேருந்து, ஒரு கார் மற்றும் எரிபொருள் லாரி மோதிக்கொண்டன. இதில், தற்போதைய நிலவரப்படி 17 பேர் இறந்துள்ளனர். பலி எண்ணிக்கை உயரலாம். விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கல் என்று அவர் தெரிவித்தார். இந்த விபத்து உக்ரைனுக்கு எதிரான ரஷிய போருடன் நேரடி தொடர்புடையதாகத் தெரியவில்லை என்றும் ஜெலன்ஸ்கி தனது உரையில் தெரிவித்துள்ளார்.



## சிரேஸ்ட வானொலி அறிவிப்பாளர் காலமானார்

இலங்கை வானொலி வர்த்தக சேவையின் சிரேஷ்ட அறிவிப்பாளர்களில் ஒருவரான புவனலோஜினி நடராஜசிவம் காலமானார்.

புவனலோஜினி நடராஜசிவம் நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் இயற்கை எய்தியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சைப் பெற்றுவந்த அவர், நேற்றுக் காலமானதாக அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை புவனலோஜினி நடராஜசிவம், மறைந்த மூத்த அறிவிப்பாளர் நடராஜ சிவத்தின் துணைவியார் என்பது குறிப்பிடத்தக்கது.



# விரைவில் புதிய வரவு செலவு திட்டம்

2022 ஆம் ஆண்டிற்காக வரவு செலவு திட்டம் இனி யதார்த்தமானது அல்ல என நிதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இன்று (04) காலை பாராளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் விசேட உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனால் விரைவில் புதிய வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்யவுள்ளதாக நிதி அமைச்சர் இதன்போது தெரிவித்தார். இதனூடாக வருமான வரியை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். தற்போதைய நிலைமையை இலங்கை உடனடியாக முகாமைத்துவப்படுத்த வேண்டும் எனவும், நாடு பேரழிவின் விளிம்பில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தலில் இருந்து விடுபட அனைவருக்கும் தேசிய பொறுப்பு உள்ளது எனத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள வரிக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியுமா என்பது கேள்விக்குறி எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



"தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஓரிரு வருடங்களில் தீர்க்க முடியுமா என்று தெரியவில்லை. கடந்த காலங்களில் வரிகள் அதிகரிக்கப்பட வேண்டிய காலப்பகுதியில் அரசாங்கம் வரிகளை குறைத்ததாகவும் அதன் பலனை இன்று அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். சுற்றுலாத்துறையின் சரிவு, எண்ணெய் விலை உயர்வு, சர்வதேச நாணய நிதியத்தில் சேராதது உள்ளிட்ட பல காரணிகள் வெளிநாட்டு கையிருப்பு இழப்புக்கு பங்களித்ததாகவும் அமைச்சர் கூறினார்.

# அமெரிக்க பணி அனுமதி ஆணை மேலும் 1.5 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு

அமெரிக்காவில் வசிக்கும் வெளிநாட்டவர்களுக்கு காலாவதியான பணி அனுமதி ஆணையை மேலும் 18 மாதங்களுக்கு நீட்டித்து அந்நாட்டு அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார். அமெரிக்காவில் நிரந்தரமாக வசிக்க கிரீன் கார்ட் வேண்டி காத்திருப்போருக்கும், ஹெச்.1பி வீசா வைத்திருப்பவர்களின் மனைவிகள் உள்ளிட்டோருக்கு இந்த சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே காலாவதியான பணி அனுமதி ஆணை தானியங்கியாக 180 நாட்களுக்கு நீட்டிக்கப்படும் நிலையில், தற்போது 540 நாட்களுக்கு மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்த தற்காலிக விதி குடிமக்கள் அல்லாதவர்களுக்கும், தானியங்கி நீட்டிப்புக்கு தகுதியுடையவர்களுக்கும் வேலைவாய்ப்பை பராமரிக்கவும், அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவை வழங்க வழி செய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் இந்த நடவடிக்கை மூலம் அமெரிக்க முதலாளிகளுக்கு பணி சம்பந்தப்பட்ட இடையூறுகள் ஏற்படாமல் தவிர்க்கப்படும் என கூறப்பட்டுள்ளது.



# ஐ.பி.எல் போட்டிகளில் அதிவேக 1,000 ஓட்டங்கள்

ஹைதராபாத் அணிக்கு எதிரான ஐபிஎல் போட்டியில் சென்னை அணியின் ருதுராஜ் கெய்க்வாட், கான்வே ஜோடி முதல் விக்கெட்டுக்கு 182 ஓட்டங்கள் சேர்த்து அசத்தியது. ஐபிஎல் தொடரில் புனேவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 46வது லீக் தொடரில் சென்னை சூப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

முதலில் ஆடிய சென்னை அணி தொடக்க ஆட்டக்காரர்கள் ருதுராஜ் கெய்க்வாட், டேவன் கான்வே அதிரடியாக ஆட 2 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்கள் குவித்தது. ருதுராஜ் 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்து சதத்தை தவறவிட்டார். அடுத்து ஆடிய ஹைதராபாத் 6 விக்கெட்டுக்கு 189 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென்னை அணி அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், ஐபிஎல் போட்டிகளில் அதிவேகமாக ஆயிரம் ஓட்டங்கள் எடுத்த சச்சின் டெண்டுல்கர் சாதனையை ருதுராஜ் சமன் செய்துள்ளார். ஐபிஎல் போட்டிகளில் ருதுராஜ் கெய்க்வாட் 31 இன்னிங்ஸ்களில் 1,076 ஓட்டங்களை குவித்துள்ளார். இதன்மூலம் சச்சின் டெண்டுல்கரின் முந்தைய சாதனையை சமன் செய்துள்ளார். இந்தப் பட்டியலில் 34 இன்னிங்ஸ்களில் 1000 ஓட்டங்களை அடித்த ரெய்னா இரண்டாமிடத்திலும், ரிஷப் பண்ட் (35), தேவ்தத் படிக்கல் (35) ஆகிய இருவரும் 3ம் இடத்திலும், ரோகித் சர்மா (37), எம்.எஸ்.டோனி (37) ஆகிய இருவரும் 4ம் இடத்திலும் உள்ளனர்.

# இலங்கைக்கு இந்தியா இதுவரை ரூ.22 ஆயிரம் கோடி உதவி

பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் இலங்கைக்கு இந்தியா கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து பல்வேறு வகையில் உதவி வருகிறது. அத்தியாவசிய பொருட்கள், பெட்ரோலிய பொருட்கள் தொடர்ந்து வழங்கி வருகிறது. தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டின் போது 11 ஆயிரம் டன் உணவுப்பொருள் வழங்கியது.

இதன்படி ஜனவரியில் இருந்து இதுவரை ரூ.7,500 கோடிக்கு அத்தியாவசிய பொருள் உதவியும், ரூ.7,000 கோடிக்கு எரிபொருள் மற்றும் நாணயமாற்று உதவியும், ரூ.7,500 கோடிக்கு ஆசிய யூனியன் கூட்டமைப்பு சார்பில் இந்தியா உதவி வழங்கி இருப்பதாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் இலங்கை மின்சாரம் மற்றும் எரிசக்தித்துறை மந்திரி காஞ்சனா விஜேசேகரா கூறியதாவது.

எரிபொருள் தேவைக்காக ஏற்கனவே வாங்கிய கடனில் ரூ.750 கோடி மட்டுமே மீதி உள்ளது. அதை வைத்து 2 தடவை கப்பல் மூலம் எரிபொருள் வாங்கலாம். மேலும் எரிபொருள் தேவைப்படுவதால், ரூ.1,500 கோடி கடனுதவி வாங்கி இருக்கிறோம்.

இதைத்தவிர, மேலும் ரூ.3 ஆயிரத்து 750 கடனுதவி கேட்டு இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம் என அவர் கூறினார்.

